ஓம்

ஜகஜ்ஜநநீ ஸத்துரோ பாஹி.

திருவருட் கோவை.

வையை R. சுப்பிரமணியையர்.

தஞ்சை:

கல்யாணசுந்தரம் முத்திராசாலை.

1906.

Copyright Registered.

சூசீபத்திரம்.

	பக்கம்.	பாடற்றொகை.
பாயிரம்	3	
நூல்:—		
1. திருவருட்பேறு	4	18
2. சித்தன் மகிழ்ச்சி	9	21
3. இடந்தலைப்பாடு	15	13
4. பாங்கன் மகிழ்ச்சி	19	12
5. பெருமான் பிரிவு	22	9
6. உற்றூர் மகிழ்ச்சி	25	8
7. பொருமான் வரவு	27	7
8. மகிழ்நர் மகிழ்ச்சி	30	12
		ஆக. 100
செய்யுள் முதற்குறிப் பகராதி ...	33	

ஓம்

ஜகஜ்ஜநநீ ஸத்குரோ பாஹி.

திருவருட் கோவை.

ஆசி.

கோச்சகக் கலிப்பா.

ஸத்தியமே நித்தியமா யித்தலத்தே தத்துவத்தைப்
பத்தருடைப் புத்திமிசை யுக்தமுடன் ஞானபதித்தே
யுத்தமத்தோ டொத்தமிக வுச்சிதயா முத்பவத்தின்
நத்துதலை யீயவென நானீற்றேன் நாதமதாய். (க)

ஆசானுசி.

வெண்பா.

கூறுந் திருவருட் கோவை த்ருபுடிமய
லாறுத லற்றதா மம்மமதை—மாறிடவே
மீராது மண்மேலிம் மேதினியிற் சத்தியமே
பேராப்பே ரின்பம் பெற.   (உ)

கோச்சகக் கலிப்பா.

அல்லல் வினையறுத் தருமருந்தா மத்வைதத்
தெல்லைதனை யியல்பாக வெடுத்துரைக்கு மிச்கோவை
நல்லதென நம்பிடவே நானிலத்தி னற்புத்தி
வெல்லும்வகை யன்றெனவே வேதமுத லோதாவே. (ங)

நித்தியத்தின் ஸத்தியத்தே நிர்மலமாய் நிலைத்திடவே
யுக்தியொன் ஞார்ந்திடவே வ்யக்தாவ்யக் தப்பொருளாஞ்
சக்தியொன்று தன்மயமாய்த் தன்னுளத்தே தானிருத்தி[ம்
யெத்துதலாம் விசித்திரத்தின் ஸத்துவாத்தித் தலத்திருத்து

இம்முறையே மறைநான்கின் றிரைதீர்த் திகத்தினிடைத்
தம்முறையைத் தான்கொண்டு சகத்திற்சலி யாதிருத்தித்
தம்முளமுந் தன்மயத்தின் றம்முளம்போற் றரிட் பீன்று
மும்மலத்தை யொழித்துநின்ற மூதறிஞர் பதத்திருத்தும். ()

பேசுகின்ற பேரனந்தப் பேதையர்க்கும் பேரின்பம்
மாசிலா தளித்திடவே மாதவத்தின் றற்குறியை
யேசிடா தியம்பிடவே யிசைத்தஸத்யந் தானெனவே
பேசுமிந்த நூலுமே பிறப்பிறப்பைப் பேர்த்திடுமே. (௬)

கட்டளைக்கலித்துறை.

வேண்டாதுவேண்டிவினையெலாம்வீழ்த்தியிவ்வீணுலகில்
மாண்டாரைப்போலமனத்தினைமாய்த்தம்மனத்திடையே
யாண்டுநன்காளவும்வேண்டியவண்ணமிசைத்திடவே
நாண்படுபோதமும்வீண்படாவாழ்வெனநல்குவையே. (எ)

குருஸ்துதி.

வெண்பா.

திருவருட் கோவையெனச் செப்புகபே ரின்பப்
பொருளமைத்தோர் நூலெனவே போதித்—தருளமைத்த
வாக்களித்தா ஞசானவ் வாக்கேயென் னுட்புகுந்திவ்
வாக்களிக்கு மொன்றறியேன் மற்று.

திருவருட் கோவை.

பாயிரம்.

[அதிகார வரலாறு.]

சொற்பொருள் கடந்த சொரூபமே யான
சற்குரு நாதனருள் சற்சிடன் பெற்ற
வொப்பிலாப் பேரின்பத் தன்மைப் பொருட்ஸ்ரீ
வண்ண லிடையு மன்ப னிடையு [இயல்
மண்ணலை யடுத்த சித்த னிடையு
மன்பனை யடுத்த பாங்க னிடையு
மன்பனுக் குற்ற ராகியோ ரிடையு
நிகழ்ந்த கிளவிக ளோர்படக் கோத்தலிற்
றிருவருட் கோவையென் றொருபேர் சிறந்து
குருநாத னருளாற் கூறுமிக் கோவையுட்
டிருவருட் பேறே சித்தன் மகிழ்ச்சி
யிடந்தலைப் பாடே பாங்கன் மகிழ்ச்சி
பெருமான் பிரிவே யுற்றார் மகிழ்ச்சி
பெருமான் வரவே மகிழா மகிழ்ச்சியென்
றெட்டே கிளவிக் கொத்தா யினவே.

[தத்துவம்.]

அவற்றுள்,
திருவருட் பேற்றுட் டூலங் கடந்த
சூக்கும வின்பந் தோன்றக் காட்டியு
மிடந்தலைப் பாட்டுட் சூக்குமங் கடந்த
காரண மதனிற் கலக்க வைத்து
மகிழா மகிழ்ச்சியுட் காரணங் கடந்த
துரிய நிலையாய்ப் பரவப் பண்ணியு
மதன் முடிவான வானந்தக் களிப்பு
ணுளுங் கடந்த வதீத நல்கியு
மிவ்வா றன்ப னெழில்பெற வேண்டிய
வவ்வந் நிகழ்ச்சிக ளாங்காங் குறத்தியு

மன்பற் கருளு மதனைச் சார்ந்து
பிறர்க்கு மவரவர் பெற்றிக் கேற்ப
வுறுபய னுதவியுந் திருவரு ணின்றதைப்
பொருத்தி யுணர்தல் புலவோர் கடனே.

முதலாவது

திருவருட்பேறு.

[திருவருட்பேற்றுட் கிளவிகள்.]

காட்சி யையந் தெளித னயப்பே
யுட்கோ டெய்வ முவத்த லிவையோ
டைக்கியந் துணித லைக்கிய முரைத்த
லிருவயி னொத்த லருளமு துரைத்த
னலம்புனைந் துரைத்த னற்பிரி வுணர்த்தல்
பருவர லறித லருட்குணம் பகர்த
லிடத்தி னணிமை யியம்பிவற் புறுத்த
லாடிடத் துய்த்த லருமை யறிதல்
பாங்கனை யறித லெனப்பதி னெட்டு
மோங்கிய திருவருட் பேற்று ளுற்றன.

காட்சி

சொற்பொருள் கடந்த சொரூபமே யான
சற்குரு நாதன் சற்சீடனைக் கண்டது.

திருவருட் கேயொரு பாய்மடை யாகத் திறந்தநெஞ்சு
மொருபொருட் கேனு மிடந்தரா தாறி யுறைந்தகண்ணுங்
குருபரற் கேவைத்த காணிக்கை யாகிய கோலமுமாய்ப்
பெருவியப் பேதந்தென் முன்னொரு பேரன்பு நிற்கின்றதே.

ஐயம்

சீடனைக் கண்டோன் றிருவருள் பெற்ற
ஆடவ னென்ன வைய முற்றது.

உருகுதற்கேகற்றகண்ணப்பனோவின்பமோர்படித்தாய்ப்
பெருகுதற்கேகற்றநம்சுகனோவிந்தப்பித்தலகைத்
திருவடிக்கீழ்மிதித்தாடுஞ்சீமான்பாலையானந்தனோ
வொருபடித்தாயென்னுளமறியாதிவ்வொருவனையே. (௨)

தெளிதல்

ஐய முற்ற வண்ண லாரருள்
செய்யப் பெறுமவ னென்றே தெளிந்தது.

சாயாப்பிறவிக்கடன்மாண்டுபோகக்கடைக்கண்வைக்குந்
தாயாங்குருவன்றடந்தாளைச்சூடுந்தவமிலர்போ
லோயாக்கவலையொழிதிநெஞ்சேயிவன்கண்களொன்றாய்ப்
பாயாதிறைஞ்சிடும்பண்பாலருளப்படுபவனே. (௩)

நயப்பு

தெளிந்து நயந்தோன் சிறிதும்பற் றின்றென
மகிழ்ந்த நெஞ்சிற்கு மகிழ்ந்து கூறியது.

அடையாரைத்தம்பாலடைவிக்குநாதனருட்கடலே
யுடையானவனடித்தாமரைசூடுமொராணமுண்டா
லடையானையவ்வாறடைவிக்கின்றதோராறுமுண்டா [சே.
விடையாமொருபற்றுமின்றெனச்சொல்லுமென்னைநெஞ்

உட்கோள்

பள்ளங் கண்ட புனல்போற் பத்த
னுள்ளந் தன்பா லுற்றதுட் கொண்டது.

சீரார்ந்தநாதனைச்சென்றெய்துமாறுசிறந்திருந்த
பேரார்ந்தபக்குவங்கண்டேகுழைந்தவென்பேரருட்கு
நேரார்ந்தநெஞ்சம்நெகநெகவேயென்னைநோக்கியநோக்
கோரார்ந்தநன்மருந்தாயெனதுள்ளமுவப்பித்ததே. (௪)

தெய்வத்தை மகிழ்தல்

அவ்வக் குணங்களி னீக்கி யன்பனைச்
செவ்வன் றந்த தெய்வத்தை மகிழ்ந்தது.

எல்லாக்குணமுமிடைவிடாச்சூழ்ந்துகொண்டேவல்செய்யும்
நல்லானையவ்வக்குணங்களினீக்கியென்முன்புநல்கும்
வல்லானைதெய்வத்திறமல்லவோதிறமற்றைத்திற
மெல்லாமதிக்கின்றயல்லோமிதனினரிதில்லையே. (சு)

ஐக்கியந் துணிதல்

போய்க்கா வன்பனைப் பூரண போதத்
தைக்கியப் படுத்தற் கண்ண றுணிந்தது

சூழுடையாயத்தைநீக்கியிவ்வன்பனைத்தொன்முறையே
யூழிடையேநின்றுறுவித்தலானினியுள்ளதெல்லாம் [டிக்கே
போழிடையில்லாப்பொருத்தமன்றேவென்னைப்பொன்ன
வாழிடந்தந்தானருள்காணிவ்வாறுவந்துற்றதுவே. (எ)

ஐக்கிய முரைத்தல்

பேதப் பயனெலா மபேத வின்பமென
வேதப் பயனைப் பெருமான் வெளியிட்டது.

இவனென்றும்யானென்றுமில்லாமலொன்றாயிருந்தவின்ப
மிவனன்றியானன்றியாரறிவாரிந்தஞாலத்தி
லிவனென்றும்யானென்றுமில்லாதவென்னையிங்கிவ்விதமா
யிவனென்றும்யானென்றும்வைத்ததெல்லாமிந்தவின்பத்து
[க்கே.

இரவயினேத்தல்

அன்ப னன்புந் தன்பா லருளு
முன்போ னின்ற முறைமை கூறியது.

மருளுந்தெருளுமயங்காமல்வந்தெனையாண்டுகொண்டா
னிருளுமொளியுமிலானந்தநாடனையானிவற்கே
யருளுந்தொறுமருளுந்தொறுமென்பாலருள்பெரிதாய்த்
தெருளுந்திறத்திவனுள்ளன்புபோலச்செழிக்கின்றதே. (கூ)

அருளழ குரைத்தல்

விழியு மருளே மொழியு மருளே
பொழியுமென் றன்பன தருளழ குரைத்தது.

செழுந்தாமரைமுகமானந்தநாடச்செழுமுகத்தே
யழுந்தேன்பிறப்பிலெனவிறுமாந்தவழகுகண்கள் [ல்
விழுந்தாரைத்தாளெடுத்தானந்தநாட்டில்விடுப்பதுண்டா
மொழிந்தாலஃதுமப்பெற்றியதாம்பின்மொழிவதென்னே.

நலம்புனைந் துரைத்தல்.

கல்வி மைந்தரை முன்னிலைப் படுத்திச்
செல்வ மைந்தனை நன்னிலை தெரித்தது.

பேயேயனையிர்சென்றோர்கோடிநூல்களின்பேச்சறிவீர்
போயேயெனையுமடிமைகொண்டான்புகழேபுகழாக்
காயேயெனினுஙசரைந்துகக்கூறுமிக்கண்மணியின்
வாயேயனையதொர்நூல்கண்டிரோகல்விமைந்தர்களே. ()

பிரிவுணர்த்தல்

பிரியாப் பிரிவைப்
பெருமான் பேசியது.

சட்டகமுந்நமக்காளுன்றிருவருள்சாரலர்போல்
விட்டகல்வன்னெனவெண்ணவும்யானின்னின்வேறுளனோ
சட்டகமுந்நமக்கொன்றென்பதுயறிவாய்தக்கதோ
விட்டகல்வன்னெனவாடியிவ்வாட்டம்விளைவிப்பதே. (கஉ)

பருவர லுணர்தல்

பிரிவுணர்ந்த பேரன்பன்
வருத்தத்தின் பரிசு வள்ள னினைந்தது.

நாங்கற்பனைகடந்தாறுமாதந்தவிந்நாயகர்தாம்
நீங்கிற்புணர்வதையாரறிவாரென்று நேயத்தினே
ஈங்குநெடிதிங்ஙனேயிருந்தாலிந்தப்பித்துலகந்
தாஙகற்கரிதெனவோவெனதன்பன்றளர்கின்றதே. (கங

அருட்குண முரைத்தல்

கூடச் செய்த பேரரு ளின்குணம்
வாடச் செய்யா தென்று வகுத்தது.

சங்கற்பமில்லாமற் றானேகிடைத்தநம்சார்பையினி
யெங்குற்றியார்சிதைப்பாரப்பனேயிஃதெளியதொன்றோ
மங்குற்றவூழ்வினைமறாதநம்மானருள்காண்
தங்குற்றவாரருள்வேறாகுமென்று தவிப்பதென்னே. (கச)

இடமணித்துக்கூறி வற்புறுத்தல்

எம்மூ ரோளியே நம்மூ ரோளியேன்
றம்மான் கூறி யகப்போருள் வைத்தது.

ஆனாரடியருக்கண்ணியராய்ப்பின்னவரவராய்ப்
போனாரிருக்குமெம்மூரொளிபோய்நமதூரொளியை
நானூரெனக்கலந்தொன்றாகிநின்றதென்னலுயிரே
யேனாரிடரிடமொன்றேயணித்திடமென்பதென்னே. (கரு)

ஆடிடத் துய்த்தல்

அன்பனை முற்பட் டாடுகேன
எம்பெருமா னெழுந்தரு ளியது.

என்னேவியப்பென்னையாண்டதென்றன்பரிடுமொலிபோய்
பின்னேயடியரைக்கூட்டிடுமானந்தப்பெற்றியினேற் [ப்
கென்னேவினைமுன்னியாடுகபோவதுபோலெய்திடின் [யே.
பின்னேவருவல்தெளிவாயென்னோர்மொழிப்பெற்றியை

அருமை யறிதல்

பெரிய மாயையைப் பிரிந்துவந் தோன்றின்
மருவிய வன்பன தருமை நினைந்தது.

ஏயேயெனவென்னையாண்டவனாரருளும்பிதனின்
வாயேயரிதில்லைவந்தெனைக்கூடியகன்றவிவன்
போயேகுணக்கடல்சூழநின்றானித்தப்பொய்யைவிட்டுச்
சேயேயகன்றதையானறியேனென்றஞ்செப்பதற்கே. (கள)

பாங்கனை யறிதல்

அன்பனை யடுத்த பாங்கனை யறிந்திட்
டெம்பெரு மானரு ளிஃதென வியந்தது.

காடாண்டபேர்களுங்காணப்பெறாதவொர்காட்சியிலே
வீடாண்டவென்னைவிடுத்தவனாரருளென்வியப்பே
னீடாண்டபாங்கனிவனையென்னன்பனுக்கிட்டுவைத்தான்
றோடாண்டகண்களும்பாய்ந்திவன்றானென்றுசொல்கின்ற
[வே.

முதலாவது

திருவருட்பேறு முற்றிற்று.

இரண்டாவது

சித்தன்மகிழ்ச்சி.

[சித்தன்மகிழ்ச்சியுட் கிளவிகள்]

சித்தனை நினைதல் சித்தன் வினாத
லுற்ற துரைத்தல் கழறி யுரைத்தல்
கழற்றெதிர் மறுத்தல் கவன் றுரைத தல்லே
வலியழி வுரைத்தல் விதியொடு வெறுத்தல்
சித்தனொந் துரைத்தல் சித்தந்தேற
வியலிடங் கேட்ட லியலிடங்கூறல்
வற்புறுத் தல்குறி வழிச்சேறல் காண்டல்
கழறியதற் கிரங்க றலைவனை வியத்த
லன்பனை வியத்தல் கண்டமை கூறல்
செவ்வி செப்ப லவனே யென்றல்
சித்தன் மகிழ்ச்சியோ டிருபது மொன்றுஞ்
சித்தன் மகிழ்ச்சியுட் சிறந்த கிளவிகள்.

சித்தனை நினைதல்

அண்ணல், அன்பே வடிவா மன்பனைக் கண்டது
தன்போற் சித்தற்குச் சாற்ற நினைந்தது.

தேங்காமற்றேங்குமவ்வொன்றையுந்தாங்குமென்சித்தத்துக்
தாங்காதகாதல் கருவித்தவன் பன்றன் றன்மையெல்லாம்[குந்
பாங்கானசித்தற்குச்சாற்றுவிடினுள்ளம்பாறிடுமா
லாங்காதலன்றற்குரைத்துரைத்தேசிறிதாறுவனே. (௧௯)

சித்தன் வினாதல்

செய்தி யறியாச் சித்த னையனுக்
கெய்திய வேறுபா டென்னென வினாயது.

காலத்தினாற்பொருளாலிடத்தாற்கலக்குற்றவரைச்
சாலத்தெளிவிப்பதன்றியொர்நாளுஞ்சலிப்பறியாய்க்
கேலத்தகாதமதோர்வேறுபாடெய்தியதென்னைகொல்லோ
காலத்தினோடிடமும்பொருள்யாவுங்கடந்தவனே. (௨௦)

உற்ற துரைத்தல்

தொண்ட னன்பு தன்னைச் சூழ்ந்து
கொண்ட தென்று பெருமான் கூறியது.

மாயப்பெருங்கடலானந்தமாகக்கடந்தவன்மை [க்கே
போயெப்புறத்திலொளித்ததுவோவென்னைப்பொன்னடி
தோயப்பிறப்பித்தவாரருள்போலொருதொண்டனன்பு[தே.
தாயெப்புறத்தினுஞ்சூழ்ந்துகொண்டேயென்னைத்தாக்கிய

கழறி யுரைத்தல்

உரைப்புக்குத் தகாத வொருநிலை கொண்டநின்
சிறப்புக்குத் தகாதெனச் சித்தன் கழறியது.

ஒன்றேயெனும்பதத்தொன்றாகிநின்றதையன்றியொன்றை
நன்றேயெனக்கண்டுநாடியதியானறிநாளில்லையா
லின்றேயெனநினக்கன்பொன்றுதாக்கியதென்கின்றியால்
நன்றேற்பெருமைக்குநானென்னகூறுவனல்லருட்கே ()

கழற்றெதிர் மறுத்தல்

பாணித் திலாமொழி பகர்தியா லன்பனைக்
காணிற் சொலாயெனக் கழற்றெதிர் மறுத்தது.

ஆணிப்பொன் னென்னுளத்தமர்ந்தானடிகாணலரிற்
பாணித்திலாமொழிகூறுதியாலென்றன்பாக்கியத்தைச்
சேணிற்குலாமொளிச்செவ்வியையன்பின்திருவுருவைக்
காணிற்சொலாய்நண்பகண்டிலைகாணந்தக்காட்சியையே. ()

கவன்றுரைத்தல்

சித்தன், பேரா வியல்பி னென்பெரு மானுக்
கியாரால் வரத்தகு மிஃதெனக் கவன்றது.

ஆராவமிழ்தங்குணங்கெடுமாரருளும்பிறிதாம்
பேராவிசும்புநிலனும்வளியும்பிறவுமொன்றாய்ச்
சேராவொடுங்குமந்நாளினுமொன்றாற்றிரிக்கப்படாய்க்
கியாராலவரத்தகுமென்றுமில்லாவிவ்விரக்கங்களே. (உச)

வலியழிவுரைத்தல்

முத்தி பத்தங் கடந்த முதல்வ
னெத்தனை யன்பினுக் காற்றுவே னென்றது.

முத்திக்குவாயிலெனுங்குருநாதனுமுத்தியெய்தும்
பத்தனுமென்னும்பகுப்புமற்றொன்றும்பதத்தையல்லா
லித்தனைநாளுமிருந்தறியேனின்றுமஃதில்லையா
லெத்தனையன்பினுக்காற்றுங்கொலுள்ளமிளகியதே. (உரு)

விதியோடு வெறுத்தல்

விதியைக் கடந்தோன்
விதியை வெறுத்தது

எக்காலமுந்தனக்கென்னவிஃலேனென்னையிவ்விதமாய்ப்
பொய்க்காதவன்பனிற்கூட்டியவூழந்தப்புண்ணியம்போல்
மெய்க்காதல்நண்பனுளத்தையுமென்பால்விரவச்செய்யா
திக்காலம்யான்செய்தவின்னலென்றேவந்தவூழினுக்கே. ()

சித்த னேர்துரைத்தல்

இனிய சித்தனும்
வினையை நோந்தது.

கண்ணார்மணியுமென் னுள்ளாருயிருங் கலங்கிடினு
மெண்ணேன் திருவடிக்கே தேனாய்வேறுபாடெய்தியதேற்
புண்ணாயென்னெஞ்சம்புழுங்கிடுமாலிப்புதுமைநினைக்
கண்ணாதலைப்பட்டதெல்லாமடியேனருவினையே. (உஎ)

இயலிடங் கேட்டல்

உளங்கரை வித்த வொருவன தியல்புங்
களமுஞ் சித்தன் கழறெனக் கேட்டது

காணார்கருதாரெனுமுண்மைகாட்டுகியான் கருதேனை
காணாவருவனின் கண்ணேயுயிராய்க்கலந்தவனைக்
காணாதகாட்சியைக்கண்டதெங்கேநின்றன் கண்களினாற்
காணாதமையாதவன்றன்மையாது கழறுகவே. (உஅ)

இயலிடங் கூறல்

பொழிலே யவனிடம் போய்க்கா ணுதியென
விழலே யறியா வீரன் விளம்பியது

கழலேயெனக்கணியாக்கியநாதன் கருணைவெள்ளச் [னிடம்
சுழலேயெனவென்னைத்தன்னிடத்தாக்கியதொண்ட [தே
பொழிலேயவன்றன்மையானென்னகூறவன்போய்க்கண்ட
விழலேசெயும்நின்றனெண்ணமெல்லாமிந்தவேண்டுவை
[யே.

வற்புறுத்தல்

போற்றிய சித்தன் போய்வருவ
லாற்றுதி யென்ன வகன்றிட்டது.

கூறப்படாதருணமுடையானையென் கொற்றவற்கு
மாறப்படாததொரன்புதந்தானை நின்னனையரல்லார்க்
கூறப்படாதமணமேகமழுமுயர்பொழில்வாய்ச்
சேறற்படாநின்றுகண்டேவருவனின்சேவடிக்கே. (௩0)

குறிவழிச் சேறல்

அருள்வழிச் செல்வோ னன்பனு மவ்வழி
வருவ னென்னு மனத்தோடு சென்றது.

எல்லாமுமொன்றாயிருக்கின்றவானந்தவெல்லையிலுஞ் [ட்ட
செல்லாமற்சென்றவென்றேதனைத்தன்பாற்செலவைத்தி
நல்லாறுமவ்வழிமேவுங்கோலாமோர்நயமறியாப்
பொல்லார்களுள்ளம்புகுந்தறியாதபொழிலிடத்தே. (௩௧)

குறிவழிக் காண்டல்

அருள்வழிச் சென்றோ னன்பனைக் கண்டிவ்
வொருவனே யவனென் றுள்ளந் தெளிந்தது.

கண்ணேகமுமென்னானந்தநாதனைக்கண்டதன்மை
விண்ணேகமுழுந்திருவளம்வேறெவர்க்குண்டுகொல்லோ
மண்ணேகமழுமலரடிசாத்தியவள்ளல்சொன்ன
தண்ணேகமழுமமிழ்தினுந்தண்ணியன்றானிவனே. (௩௨)

கழறியதற் கிரங்கல்

எண்ண மெல்லா மிழந்த சித்த
னண்ணலைக் கழறினே னறியே னென்றது.

ஆவாவிவனைக்கண்டியாரேதம்முள்ளமிரங்கக்கல்லா
ரோவாதுருகியவுள்ளத்தனைப்பிறிதொன்றறியா
னேவாவிடுத்ததொம்பினைப்போலொன்றிலெய்திநின்றான்
காவாவருள்செய்தவண்ணலையென்னேகழறினனே. (௩௩)

தலைவனை வியந்துரைத்தல்

அன்பே வடிவா மன்பனை யகன்று
தன்பால் வந்த தலைவனை வியந்தது.

என்புடையான்றன்னடியருக்கென்பரிளங்கன்றினைத்
தன்புடையில்லாதகற்றியவானெனத்தன்புடைக்கே
யன்புடையானைமறந்தறியானையகன்றுவந்த
வன்புடையானவனேதிண்ணியானிந்தவையகத்தே. (௩௪)

அன்பனைவியந் தகறல்

நல்லோ னிலைமை நாயகற் குரைப்பச்
செல்வோ னன்பனை வியந்து சென்றது.

கல்லேயிரும்பேகரைந்தோடினாலுங்கரைவறியார்க்
கொல்லேதிருவுளம்நீராயுருகவுபாயம்வைத்தா
னெல்லேபகலேயுருகுகின்றானின்னமின்னமிவன்
வல்லேனறிந்திடயாதெதற்கோவழிவைத்திட்டதே. (௫௫)

கண்டமை கூறல்

ஆங்குக் கண்ட வன்ப னிலையையோர்
பூங்கொடி யாகப் புனிதற் குரைத்தது.

தேங்கியகாதலெனுந்தென்றல்வீசச்சிறிதசைந்து
தாங்கியகன்றதொர்கொம்பினைநாடித்தனிநின்றதோர்
பூங்கொடிகண்டேன்புகலப்படாதபுதுமைக்கெல்லா
மோங்கிடமாயென்னுளமேயறிந்தவுயர்பொழிற்கே. (௫௬)

செவ்வி செப்பல்

பின்னுங் கேட்க விரும்பிய பெருமாற்
கன்ப னழகெலா மறிய வுரைத்தது.

பொன்னைக்கண்டாலன்னமேனியன்றாமரைப்போதுகளைப்
பின்னைக்கண்டோட்டும்பெருவிழியான்பிறிதொன்றறியான்
தன்னைக்கண்டாறியவுள்ளத்தினானவன்றன்னைக்கண்டு
நின்னைக்கண்டேனெனவேநினைந்தேனிதுநிச்சயமே. (௫௭)

அவனே யென்றல்

உவமையி லழகெலா முரைப்பக் கேட்டோ
னவனேயென்னன்பனென்றகங்குளிர்ந்துரைத்தது

பண்டான்கமழுமறையறியாதபதவியையே
கண்டான்பிறிதொன்றுங்காணானிம்மாயப்பெருங்கடற்கே
தண்டானென்போலுந்தகவுடையானெனச்சாற்றுமுருக்
கொண்டானைக்கண்டதுண்டேலவனேயென்குலக்கொழுந்
[தே

சித்தன் மகிழ்ச்சி

அண்ண னிலையு மன்ப னிலையு
மெண்ணிய சித்தன் மகிழ்ச்சி யெய்தியது.

எல்லாவருள்செய்தந்தன்னிலைமாறுவியல்பினையும்
நல்லாரினல்லவனாகியவன்பனலத்தினையுஞ்
சொல்லாமற்சொல்லியென்னுள்ளங்குளிர்வித்ததூயவர்க்கு
வல்லேனன்கைம்மாறவர்க்கேயென்னையாளாய்வகுத்தனனே.

இரண்டாவது
சித்தன் மகிழ்ச்சி முற்றிற்று.

மூன்றாவது.

இடந்தலைப்பாடு.

[இடந்தலைப்பாட்டுக் கிளவிகள்]

பொழிலிடைச் சேற லன்பன் மெலிதல்
பொழில்கண்டு மகிழ்த லுயிரென வியத்த
றளர்வகன் றுரைத்தன் மொழிபெற வருந்த
லணித் தயங்க றயங்க வருந்த
லண்விட வருந்த லைக்கியப் படுத்த
லின்றி யமையாமை யாயத் துய்த்த
னின்று வருந்த லென்ற பதின்மூன்று
மிடந்தலைப் பாட்டு ணடந்த கிளவியே.

பொழிலிடைச் சேறல்

உரிய சித்தனை யுளந்தெளி வித்த
அரிய பொழிலிடை யண்ணல் சென்றது.

கல்வியென்றோதுங்கருங்கடல்வீழ்ந்துகவலையையா
தொல்விருந்தாயென்னுளம்புகுந்தானருளுய்ப்பினல்லால்
நல்விருந்தாயென்னறிவாற்புகுந்ததொர்நாளுளதோ [ற்கே.
செல்விருந்தாயின்றுஞ்செல்வம்நெஞ்சேமுன்புசெல்பொழி

ஐக்கியம்

அபேத நாமெனு மதையும் விலக்கித்
தபாத வன்பனைத் தன்னுட் கொண்டது.

[தோ

என்னன்பனுண்மையைமென்மேலுணர்ந்தணர்ந்திங்ஙனந்
தன்னையுந்தானிழக்கின்றதொர்காலத்தஞ்சார்ந்துநிற்றல்
நன்னயமோசச்சிதானந்தம்நாமெனும்நல்லுணர்வே
சொன்னவையெல்லாங்கடந்ததில்நீயுமொருசுமையே. (சக)

இன்றியமையாமை கூறல்

ஒன்றி யொன்றாத வொருவ னன்பன்றனக்
கின்றி யமையாமை யெடுத்து ரைத்தது.

என்னைமறந்திடுமென்னையுந்தன்னடிக்கீழ்வைத்தவன்
றன்னைமறந்துமொரருள்வெள்ளந்தனைமறக்கு
மென்னைமறந்திடமாட்டாதநின்பாலெழுந்தவன்பு
தன்னைமறந்திடவல்லதுவோவென்றனிநெஞ்சமே. (ருo)

ஆயத் துய்த்தல்

நின்பெரு மைக்கு நிகரில் லையென
அன்பனை யண்ண லாயத் துய்த்தது.

நீதான்கவலைசேறிநின்றையம்நின்னின்னுயிர்தான்
யாதானகப்படுதேதிட்டதுவோவென்னையானறியேன்
மீதாய்ப்பலசொல்லியாவதென்நின்னடிவீழ்பொடியைத்
தாதாய்முடிக்கின்றபேர்சுட்குமேயென்னைத்தந்திட்டதே .()

நின்று வருந்தல்

ஆயத்துக் கூட்டி யருளாற் பிரிவோன்
நேயத் தருமை நின்று நினைந்தது.

பிரிந்தாலருளைப்பெறுதவர்போன்றெனைப்பேதுறக்கு [கும்
மிருந்தாலருள்வெள்ளமெய்தினர்போன்றென்னையின்புறக்
பொருந்தாதிருப்பினுநிற்பினுமொன்றாய்ப்பொருந்துதற்கே
மருந்தாயிருப்பதையானறியேனிந்தவார்பொழிற்கே. (ருஉ)

மூன்றாவது
இடந்தலைப்பாடு முற்றிற்று.

நான்காவது

பாங்கன் மகிழ்ச்சி.

[பாங்கன் மகிழ்ச்சியுட் கிளவிகள்.]

ஆராய்த லிஃதோ ரருளென வறிதல்
பாங்கனிடைச் சேறல் குறையுறத் துணித
லுயர்பசு வினாத லூர்பேர் வினாதன்
மொழிபெயர்த் துரைத்தல் கருத்தறி வித்தல்
யாரெனத் தேர்த லெழிற்கருத் தறித
லிருவர் நினைவு மொருவழி யுணர்தல்
பாங்கன் மகிழ்ச்சியோ டவைபன் னிரண்டும்
பாங்கன் மகிழ்ச்சியுட் பகர்ந்த கிளவிகள்.

ஆராய்தல்

அன்பனை, இவன்வேறுபா டியாதென
வவன்பாங்க னாராய்ந்தது.

எந்நாளும்போலிலையென்னையன்முன்போலினம்புகுதான்
தன்னோர்தொழிலினுந்தான்புகுதான்றன்னுடம்பினையு
முன்னானிருப்பதும்போவதுமேயறியாமலுற்றா
னென்னோவிவனுளத்துற்றதியானறிகிற்கிலனே. (௫௩)

அறிதல்

அருள்பெற்ற துண்டெனத்
தெருள்பெற்று நின்றது.

என்னேயிவன்கண்களிந்நாளுமில்லாவொளியெறிக்கும்
பொன்னேர்வடிவமுங்காண்டொறுமோர்புதுக்காட்சிசெயு
முன்னேர்மொழியன்றிச்சொல்லினுமோர்சுவைமுந்தியதாற்
றன்னேரிலாவிவற்குள்ளார்திருவருடந்தவரோ. (௫௪)

பாங்கனிடைச் சேறல்

குறிப்பு மொழிபாற் கூறிப் பாங்கனை
யறிவுடம் படுப்பனென் றண்ணல் சென்றது.

தன்பணியேயன்றியொன்றிற்றலையிடத்தானறியா
தென்பணியாக்கியெனைத்தனக்காக்கியவன்பனியல்
பொன்பணிபோலவென்னன்பனொடொன்றாய்ப்பொருந்தி
யின்பணியாநின்றபாங்கற்குங்கூறியிசைவிப்பனே. [நின்றே

குறையுறத் துணிதல்

இருவரு மோரிடத் திருப்பக்கண் டாங்கோர்
குறையுடை யான்போற் கூறத் துணிந்தது.

தன்பாலருள்பெறத்தேடுகின்றாரவர்தம்மையெல்லா
மென்பாலருள்பெறவைத்தவனாரருளாலிவர்க
ளின்பாலெமக்குயிரொன்றேயெனவிங்கொருங்கிருந்தா
ரன்பாலொருகுறையுள்ளவன்போற்சென்றறிவிப்பனே. ()

பசு வினாதல்

அன்ப ரிருவரு மமர்ந்த செவ்வியுள்
தன்பசு வினாஅய்த் தலைவன் சார்ந்தது.

என்னாற்குறியிடப்பட்டதுவென்னுயிர்போலினிய
தொன்னூருறவினரென்றறியாமலொருபடித்தாய்த்
தன்னாரமிழ்தம்பொழிகின்றதென்றன்றவப்பயனும்
பொன்னார்பசுவொன்றுபோந்ததுண்டோவிப்புனத்தயலே.

ஊர்பேர் வினாதல்

பசுவி னாஅய பதம்வே றறியப்
பசுபதி யூர்பேர் பகர்மி னென்றது.

ஊர்களெல்லாமெங்களூராயிருந்துமொரூருமில்லேம்
பேர்களெல்லாமெங்கள்பேராயிருந்துமொர்பேருமில்லேம்
யார்களுக்கர்யினுமூரொடுபேருண்டென்றியாமறியேம்
பேர்களுமூர்களும்யாவோநுமக்கவைபேசுமினே. (ருஅ)

மொழிபெறாது கூறல்

அன்பர் வாய்மொழி யண்ணல் பெறாஅ
தின்பம் போலுமென் றெடுத்தி சைத்தது.

வேதங்கடந்தவென் வாய்மொழிநீங்கள்விடையளித்த
போதங்கொழியுமென்றேவன்றியுள்ளம்புறத்தெழுந்தாற்
பேதங்கடந்தவென்ஞானக்காட்சியினாற்பிறந்த
போதங்கலையுமென்றேயறியேன்மௌனம்போற்றவதே.

கருத் தறிவித்தல்

பொருத்தி யுரைத்துக்
கருத்தறி வித்தது.

இருவருமோருள்ளமெய்திநின்றீரிதுவேயெனக்குக்
கருதியபேறதுகிட்டியதாலினியான்கவலேன்
பொருவருமானந்தம்பெற்றனனென்பாற்பொருந்திநின்ற
திருவருணீவிரிருவர்க்குமொன்றாய்த்திகழ்ந்திட்டதே. (௰)

யாரெனத் தேர்தல்

அருளுடை யண்ணல் யாரெனத்
தெருளுடைப் பாங்கன் தேர்ந்தது.

முன்னொன்றுகூறுவர்பின்னொன்றுகூறிமுடித்திடுவர்
தன்னொன்றுமில்லார்பிறர்க்கேயுழன்றிடுந்தன்மையினா
ரென்னென்னவேண்டுதிரின்றேமுடிக்குவமென்றுநிற்பார்
பின்னையுமின்னனகூறுவர்யாரிப்பெரியவரோ. (௰௧)

கருத் தறிதல்

தேரும் பாங்கன் றேர்ச்சியுட் டேசிக
ராரு மொழிப்பொரு ளறிய வந்தது.

ஆழமன்றேவுடைத்திவ்வையர்வார்த்தையறிவறிந்தார்
சூழவைத்தார்முன்னரோர்பசுவென்றுதுவக்கியசொல் [கா
தோழனுக்காயட்பின்னரோர்பேர்வினையதொர்தொல்பொருட்
யேழையனுள்ளத்திசைவேமுடிவாயிருந்திட்டதே. (௰௨)

இருவர் நினைவு மொருவழி யுணர்தல்

அண்ண லருளு மன்ப னன்பும்
எண்ணம் விரவிய பண்பா னுணர்ந்தது.

மெய்யேயிவர்க்கில்லையேயொருவேட்கையிம்மெய்யடியான்
பொய்யேயிவனையறியானெனவிந்தப்பொய்ப்புவிக்கே
வையாவிவன்கண்களன்றோர் திருக்கண்ணிற்பாய்ந்தவருங்
கையாவமிழ்துண்டுதானோர் தனிச்சுவைகாண்கின்றதே. ()

பாங்கன் மகிழ்ச்சி

ஆங்கே யருளு மன்பு முணர்ந்த
பாங்க னடியேன் பாக்கிய மென்றது.

ஓமெனுமோர்பொருள்கைப்பிடியாகவுவந்தளிப்பா
ராமிவரேயென்னுயிரனையானுக்கருளளித்தார்
தாமருடந்ததுமென்றோழனன்புதம்பால்வந்ததும்
யாமறியும்வண்ணங்காட்டினராலிதென்பாக்கியமே. (௩௪)

நான்காவது
பாங்கன்மகிழ்ச்சி முற்றிற்று.

ஐந்தாவது

பெருமான் பிரிவு.

[பெருமான் பிரிவுட் கிளவிகள்]

அருளாற் பிரித லருட்பிரி வாற்றா
நெஞ்சொடு கூற னெஞ்சொடு வருந்தல்
வருத்தங்கண் டுரைத்தல் பொருந்திவற் புறுத்த
லாற்றாது புலம்ப லன்பினுக்கிரங்கல்
கைம்மா றன்பலாற் காணே னென்றல்
வருமியல் புரைத்த லெனவரு மொன்பதும்
பெருமான் பிரிவுட் பிறந்த கிளவியே.

அருளாற் பிரிதல்

அருள்போற் றுமினெனப்
பெருமான் பிரிந்தது.

பள்ளங்கண்டோடும்புனலனையேற்கென்னபண்புளதோ
வுள்ளங்களெல்லாமுருகிநின்றார்பக்கலோடலல்லாற்
கள்ளங்களொன்றுங்கருதலிர்சின்னுட்கரந்துறைந்து
பொள்ளெனவீங்கேபுகுவனென்றாரருள்போற்றுமினே. ()

நெஞ்சொடு கூறல்

பெருமான் பிரிவாற் பேதுறு நெஞ்சுக்
கோருமா னன்ப னுணர்ந்து கூறியது.

மருந்தும்பிறவிக்குமுண்டுகொலோவெனவாடுமன்பர்க்
கருந்துமமிழ்தாயடைகின்றநாதரருட்பிரிவைத்
திருந்துமின்னீதெனத்தேருமனீதான்றிகைத்தியென்றால்
வருந்துமடநெஞ்சமேயென்னயாமினிவாழ்வகையே. (௬௬)

நெஞ்சொடு வருந்தல்

பின்னும் வருந்தி யின்னல் செய்யுந்
தன்னெஞ் சினுக்குத் தான்வருந் தியது.

என்னைத்தனியன்னடியாரொடொன்றாகவிருத்துமரு
டன்னைத்தந்தாரகன்றலவரோநீந்தனித்தெழுந்து [சம்
பின்னைச்சென்றோன்றிடும்பெற்றியில்லாதவிப்பேதைநெஞ்
இன்னற்செய்தென்னிடத்தேயிருந்தென்பயனெய்தியதே.()

வருத்தங்கண் டுரைத்தல்

அன்பன தாற்றாத் துன்பங் கண்டு
சென்றா ரலரெனப் பாங்கன் செப்பியது.

சென்றாரலரவர்வேறிடப்நம்முட்செறிந்திருந்தா
ரென்றாலிதவுணக்கியான்கூறுகின்றவியல்புமன்றால்
நன்றாயறிதியெல்லாமறிந்தநீநலிதியென்றால்
நின்றோவரவர்சொற்பொருடேர்ந்ததந்நெஞ்சகத்தே. ()

வழியொழுகி வற்புறுத்தல்

உருகலும் வேண்டுவ தோன்றாற் பின்னருட்
பருகலும் வேண்டுமெனப் பாங்கன் பகர்ந்தது.

பொய்யறியாருண்மையேவடிவானார்புகுந்தநின்றா
ரொய்யெனப்போயினரென்றுநம்முள்ளமுருகனன்றா
லையவிர்நம்முயிர்நானேயெனச்சொன்னநன்மையையும்
மெய்யெனவுட்கொண்டடங்கலுங்காண்பின்விதநமக்கே. ()

ஆற்றாது புலம்பல்

எல்லா முணர்ந்தே னாயினு மிப்போ
தோல்லே னாற்றவென் றன்ப னுரைத்தது.

சாலப்பெரியவர்தந்திட்டவாரருட்சால்பினையென்
போலப்பெரிதுமுட்கொண்டவராங்ஙன்போற்றிநின்றுஞ்
சீலத்தனிநெஞ்சுஞ்செல்லாநிலையுஞ்சிறிதுமில்லா
காலத்தினீர்மைபல்லாவொருகாரணங்கண்டிலனே. (எ)

அன்பினுக் கிரங்கல்

அளவிலா வன்போர் பொழுது மாறாதென
வளமேலா முருகிய வன்ப னுரைத்தது.

அப்பாவென்றோர்தரமெண்ணிவிட்டாலிங்கவர்கட்கெல்லா
தப்பாதரியவர்தன்னறிவாலெங்குஞ்சார்வறியா [ந்
ரெப்போதுங்கண்ணெதிர்நில்லாரெனக்கவன்றேங்குநெஞ்
யப்போதுமாற்றாயரியர்க்குநீவைத்தவன்பினுக்கே. [சே

கைம்மா றன்பலாற் காணே னென்றல்

இவ்வா றுருகி யிருப்பதை யன்றிக்
கைம்மா றொன்றுங் காணே னென்றது.

எம்மாறும்வேண்டாதருளேபொழிந்திடுமெம்மிறைக்குப்
பொய்மாயக்காட்டிட்புகுந்துநின்றேனுட்புகுந்தருளிச்
சும்மாவிருக்குமொருக்குமங்காட்டியசோதியர்க்குக்
கைம்மாறவர்தந்தவன்பையல்லாலொன்றுங்காண்கிலனே.

வருமியல் புரைத்து வருத்தந் தணித்தல்.

குழைவார்க் கோடி வருங்குரு நாதனேன்
றுழையாம் பாங்க னுரைத்து மகிழ்வித்தது.

அழுபவர்க்கோடியணைக்கின்றவன்னையறிவழிந்து
விழுபவர்க்கோடியெடுக்கின்றவீரன்விழுந்தெழுந்து
தொழுபவர்க்கோடித்துணைசெயுந்தெய்வந்தவண்டன்பிறைற்
குழைபவர்க்கோடிவருபவனங்கள்குருபரனே. (எங)

ஐந்தாவது

பெருமான் பிரிவு முற்றிற்று.

ஆறாவது

உற்றார் மகிழ்ச்சி.

[உற்றார் மகிழ்ச்சியுட்கிளவிகள்]

உற்றார் வினாத லுற்ற துரைத்த
லுற்றார் தெளித றெய்மென் றுணாத்த
லிளமை கூறி வியத்த லிவையோ
டுற்றார் மகிழ்ச்சியென் றுற்ற வாறு
முற்றார் மகிழ்ச்சியு ளுற்ற கிளவிகள்.

உற்றார் வினாதல்

பெற்ற வருளாற் பிறந்த வேறுபா
டுற்றா ரறியார் பாங்கனை யுசாயது.

ஒருகாலுருகிடுபோர்காண்மகிழ்ந்திடுமோரொருகாற்
பெருகாச்சிறுகாவொருநிலையாகிப்பிறங்கிடுங்கண்
இருகாலொருகாலடைந்தொளிவேறுயிருக்கின்றதால்
அருகாலறிகுவைபாங்கவென்னேவிவற்காயதுவே. (எச)

உற்றா துரைத்தல்

ஓங்கிய வன்பனுக் குற்ற திஃதெனத்
தீங்கிலாப் பாங்கன் தெரிந்து செப்பியது

நீரோவினவுதிர்யானென்ன கூறவிந்நேயனுள்ளம்
நீரோயெனநெகிழ்ந்தொன்றும்நில்லாதநிலையுணர்ந்து
நீரோசெல்வாரிற்றவிக்கின்றகாலத்தோர்நேயர்வந்து
நீரோயெமதுயிரென்றுரிதவேநிகழ்ந்ததுவே. (எரு)

இதுவுமது.

பெரியீர்வினவுதிர்யானென்னகூறவிப்பிள்ளையுள்ளம்
எரியின்மெழுகாயெவையும்நில்லாதவியல்புணர்ந்து
தெரியுந்தெரிவுமழிகின்றகாலத்தோர்தேசிகர்தாம்
புரியுந்தொழிலொன்றும்பற்றலையென்றுபுகன்றனரோ. (எசு)

இதுவுமது.

அறிந்தீர்வினவுதிர்யானென்னகூறவிவ்வன்பனுள்ளம
எறிந்தேயெவற்றையுமொன்றும்நில்லாதவியல்புணர்ந்து
மறிந்தேயழிகின்றகாலத்தோர்வள்ளல்வகைவகையாய்ப்
பிறிந்தாலுனையன்றியொன்றுமின்றுலென்றுபேசினரோ. ()

உற்றார் தெளிவு

உற்றா ருள்ளங், தெற்றெனத் தெளிந்தது.

இவ்வன்பனிவ்வருள்பெற்றானென்றின்றுணிசைத்திடுமு
னவ்வருளெம்பாலடைந்ததுபோலுமோரானந்தந்தா
னெவ்வியல்பென்றறியேமெமதுள்ளத்தெழுந்ததுண்டாற்
றெய்விகமீதென்றுதாமாய்த்தெளிந்தவெஞ்சித்தங்களே. ()

தெய்வ மென்றல்

ஐம்புலங் குளிர்ந்தவர், தெய்வ மென்றது

தண்ணாரமிழ்தத்தையூட்டிவைத்தானொருசந்தனத்தைக்
கண்ணாருடம்பினிற்பூசிவைத்தானொருகானமதைப்
பண்ணார்செவியினிற்பாடிவைத்தானோர்பரந்தமண
முண்ணாசியினின்றுவீசவைத்தானிவனோர்தெய்வமே. (எகூ)

இளமைகூறி வியத்தல்

இளமையே யின்ப மெய்தி னனென
வளமைச் சுற்ற மகிழ்ந்து ரைத்தது.

பல்லோமுளையாபருவமுமாகாபழக்குடைத்தாய்ச்
சொல்லோமுதிராசிறுநாவிற்பாலின்சுவையகலா
எல்லோபகலோவெனவறியாதவொரின்பமுற்றான்
நல்லோனிவனேயிதுவேபிறப்பிந்தநாணிலத்தே. (௮௰)

உற்றார் மகிழ்ச்சி

குருவருள் பெற்றவிக் குமரனைக் கண்டதே
திருவரு ளேமக்கென வுறவினர் மகிழ்ந்தது.

விரிசித்தம்பாவையுமொன்றாயொடுங்கிவிளங்கிடுமா
றுருசித்தவோர்பொருளுள்ளுக்குட்காட்டியுளக்கண்ணினாற்
பரிசித்தநாதனைத்தன்னொடொன்றாகப்பதித்தவனைத்
தரிசித்தபோதேகரையேறியதெங்கள்சன்மங்களே. (௮௧)

ஆறாவது
உற்றார்மகிழ்ச்சி முற்றிற்று.

ஏழாவது

பெருமான் வரவு.

[பெருமான் வரவுட் கிளவிகள்]

அன்பர்க்குத் தோற்றம் பாங்கர்க்குத் தோற்றம்
வந்துழிப் பாங்கன் வகுப்புப் பெருமான்
றன்னிலை கூற லருணிலை சாற்றல்
பிரிந்துழி யன்ப னிருந்தது பேசல்
குணமகிழ்ந்து வாழ்த்த லெனவிவை யேழும்
பெருமான் வரவுட் பிறந்த கிளவியே.

அன்பற்குத் தோற்றம்

அன்ப னோர்நா ளமர்ந்தி ருப்புழித்
தன்பாற் றோற்றம் பாங்கற்குச் சாற்றியது.

எந்நாளுமோர்நாளென விருந்தாலுமென்னெண்ணமிழந்
திந்நாளிருப்புழியென்னைமுன்னாண்டவெழில்வடிவோ
டந்நாளிலப்பொழிற்றோற்றியவாறுவந்தஞ்சலஞ்சல்
முந்நாளுமொன்றாய்முடிக்குவமென்றுமொழிந்தனரோ. (௮௨)

பாங்கற்குத் தோற்றம்

பொய்ம்மை யில்லாப் பாங்கன் புந்தியுண்
மெய்ம்மை நற்குறி யன்பற்கு விளம்பியது.

நாதரின்னேவருவார்வருவாரென்றோர்நல்லுணர்ச்சி
யேதெனநாடிலன்றேனுமென்னுள்ளத்தெழுந்ததண்டாற்
போதமுமேலிட்டவர்விட்டதூதெனப்போந்ததண்டால்
யாதினியையமின்றேவருவார்நம்மிறையவரே. (௮௩)

வந்துழிப் பாங்கன் வதுப்பு

பெம்மான் வந்துழிப் பேரரு ளாளர்க்
கெம்பா னினைவு மெழுந்த தெங்க
ளோங்கிய தவமெனப் பாங்கன் பகர்ந்தது.

எந்தெந்தவன்பர்க்குமாரருள்கூரவெழுந்தருளிப்
பந்தந்தவிர்க்குமெந்நாதர்க்கெங்கேனுமோர்பற்றுளதோ
அந்தந்தவன்பர்க்குளம்பால்நினைவுமகத்தெழுந்து
வந்திந்தக்காட்சிதந்தாரிதுவேயெங்கண்மாதவமே. (௮௪)

தன்னிலை கூறல்

அன்னபொழு தண்ணல், தன்னிலைகூ றியது.

எந்தெந்தவன்பருமோரன்பராகியிருக்கின்றிரா
லெந்தெந்தவன்பருமென்னுயிராகியிருக்கின்றிரா
லந்தந்தவன்பரென்றெண்ணமலென்பாலமர்ந்துநின்றே
னந்தந்தவன்பருக்கஃதேயருள்செயுமானந்தமே. (௮௫)

திருவருள் வன்மை செப்பல்

காலதேயங் கடந்த பேரருட்
சீலம் பெருமான் செப்பி மகிழ்வித்தது.

பெரியதோர்காலம்பெரியதோர்தேயம்பிறகிடினும்
அரியதொன் றுண்டோ திருவருட்கியாரேயறியவல்லார்
எரியதில்நெய்யாய்நினைவதுமீர்தாமிழந்திடினும்
உரியதோர்காலத்திலெங்கிருந்தோவந்திங்குற்றிடுமே. (௮௬)

பிரிந்த காலத் திருந்தது பேசல்

பிரிந்த காலத் தன்ப னிருந்ததைத்
தெரிந்த பாங்கன் செப்பி மகிழ்வித்தது.

எத்தனையெத்தனைநாள்கள்சென்றாலுமங்கெம்பெருமா
னத்தனையத்தனையன்பருக்காரருள்செய்குவரென்
றித்தனையித்தனையெண்ணினனாற்றியிருந்ததல்லாற்
கத்தநின்னாருள்வேறானதென்றுகருதிலனே. (௮௭)

குணமகிழ்ந்து வாழ்த்தல்

அன்ப னருட்குண மண்ணல்மகிழ்ந்து
தன்போ லன்பனைத் தான்வாழ்த் தியது.

தாம்பெற்றபேறித்தரணியர்யாருந்தவப்பெறவே
ஆம்பற்றுடையவொழுக்கயன்றோநமக்காயபொருள்
தேம்பற்சிறிதமில்லாவிவர்கிதைத்திகழ்ந்திட்டதால்
நாம்பெற்றபேறிதுவேயன்பன்வாழிநல்லூழிகளே. (௮௮)

எழாவது

பெருமான் வரவு முற்றிற்று.

எட்டாவது

மகிழா மகிழ்ச்சி.

[மகிழா மகிழ்ச்சியுட் கிளவிகள்]

மனமே தானெனல் கண்ணே தானென
னுடம்பே தானென னுலகமே தானெனன்
மோனமே தானென லன்ப னுணர்ச்சி
யுணர்ச்சி யமர்வு பாங்க னுருக்க
மானந்தக் களிப்பொடு வாழ்த்தெனும் பத்து
மகிழா மகிழ்ச்சியுள் வந்த கிளவியே.

மனமே தானெனல்

பிரிந்ததன் வரவைக் கருதி யிருந்தவற்
கோருமனந் தானெனப் பெருமானுரைத்தது.

குருநாதர்யாண்டையர்காண்பன்கொலோவெனக்கொண்
[டுநின்ற
ஒருவாசையுள்ளாய்குருநாதர்யாண்டையர்காண்கிலையோ
ஒருவாசைகொண்டவ்வுள்ளமவ்வாசையொடுங்கிநின்றாற்
குருநாதரன்றேகுறிக்கொள்வையாலெங்குலக்கொழுந்தே.

கண்ணே தானெனல்

கண்ணே தானெனப், பின்னு முரைத்தது.

குருநாதனையிருகண்ணாரக்காணவுங்கூடுங்கொலென்
றொருவாசையுற்றாய்குருநாதர்யாருள்ளங்கொள்கிலையோ
வொருவாசையுற்றவக்கண்களவ்வாசையொடுங்கிநின்றாற்
குருநாதரன்றேகுறிக்கொள்வையாலெங்குலக்கொழுந்தே.

உடம்பே தானெனல்

உடம்பே தானென, உடனு யுரைத்தது.

மெய்வாய்கண்மூக்குச்செவியெனும்யாவும்விருப்பொழிந்து
பொய்வாய்ப்புகாமற்றமதிடத்தேதாம்பொருந்துமெனி
னுய்வாயவையவைநாமல்லவோநின்னுடம்பினையும்
கைவாயலைநின்குருநாதரென்றுநயந்துகொள்ளே. (௬௧)

உலகமே தானெனல்

உலகமே தானென, நலமா யுரைத்தது.

பற்றொன்றிலர்மனுடம்பொடுமுள்ளமொன்றிற்பதிந்தாற்
பற்றினைத்தந்துபுறத்திழுப்பாரெவர்பாரினிலே
பற்றுள்ளபேர்கட்குப்பற்றின்மைகாட்டப்பரம்பொருடான்
பற்றியிவ்வெல்லாவுலகமுந்தானாய்ப்பாந்திடுமே. (௩௨)

மோனமே தானெனல்

மோனமே தானென, ஞான முரைத்தது.

ஒன்றுமின்றென்றேயொடுங்கியபேர்க்கிங்குறுவதுதா
னின்றுரைத்தாமன்றித்தன்னறிவாலிஃதிசைவதன்றா
லன்றியொன்றில்லாவதுவொன்றுமல்லாவழகுசொல்ல
வொன்றுவதன்றாற்பின்கேட்பதுமன்றாலுணர்ந்துகொள்
[ளே.

அன்ப னுணர்ச்சி

உணர்த்தா துணர்த்திய துணர்ந்த வன்பன்
உணர்த்தியவுணர்வை யுணர்வாலுணர்ந்தது.

யாரறிவாரொன்குருநாதர்வாய்மொழியிப்படிப்போ
லோருருவாய்வந்தொருகுறியுள்ளமுறுத்திலரோ
லோருருவாய்வந்தொருகுறியுள்ளமுறுத்திவிட்டால்
யாரறியார்பின்னரஃதல்லவோவுள்ளிருக்கின்றதே. (௩௪)

உணர்சிசி யமர்வு

உணர்ந்த வுணர்ச்சி, யமர்ந்தஃ தாயது.

சொல்லாமற்சொன்னவிவ்வெல்லாமுமென்னாட்சுவறிநின்
வெல்லாமல்யாவையும்வென்றுகொண்டொன்றாய்விளங்[று
றில்லாமல்யானாயவ்யானென்பதுவுமில்லாததுவா [கியெதி
யெல்லாங்கடந்திட்டிருப்பதற்கென்னையிழுக்கின்றதே.(௩௫

பாங்க னுருக்கம்

குருவின் றன்மையு மொருவன் றன்மையும்
அருகறி பாங்க னுருகி நினைந்தது.

எவரோயறிவாரிவரோர்குருவிங்ஙனென்றிருந்தே
னிவரோவெனதொருநண்பரென்றெண்ணியிருந்துவிட்டே
னிவரோயவராயவரேயிவராயிருந்தவிட்டா
ரெவரேயறிவாரறிவாரறிவாரிவர்தன்மையே. (௯௬)

ஆனந்தக் களிப்பு

பொருளாய் நின்ற பூரண வன்பனுக்
கருளாய் வந்த வானந்தக் களிப்பு.

பாங்காயிருப்பவவிஃதொன்றசேட்டிபரமகுரு
ஈங்கோருருக்கொடுவந்துநின்றனக்கியானுமுற்றேன்
தாங்காவருளினைத்தந்தனனிஃதோர்கனவுகண்டேன்
ஆங்கேகனவினைக்கண்டநினைவுமழிகின்றதே. (௯௭)

இதுவுமது.

அருகாயிருப்பவவிஃதொன்றகேட்டியருட்கடலோர்
குருவாயுருக்கொடுவந்தநியானுமங்குற்றுநின்றேன்
மருவாவருளைவழங்கியதிஃதோர்கனவுகண்டேன்
ஒருவாக்கனவினைக்கண்டநினைவுமொழிகின்றதே. (௯௮)

இதுவுமது.

அன்பாயிருப்பவவிஃதொன்றகேட்டியருட்குருவோ
ரென்பாலுருக்கொடுவந்துநின்றனங்கியானுமுற்றேன்
தன்பாலருளினைத்தந்தனனிஃதோர்கனவுகண்டேன்
பின்பாற்கனவினைக்கண்டநினைவும்பெயர்கின்றதே. (௯௯)

பாங்கன் வாழ்த்தல்

தாங்கா துருகிப், பாங்கன் வாழ்த்தியது.

எல்லாப்பதவிக்குமேலாயிருந்தவெழிற்பதத்தில்
நில்லாமனின்றவிந்நேயனும்வாழியிங்கோர்மையினைச்
சொல்லாமற்சொல்லியதாயனும்வாழியிதுதொன்முறையை
வல்லார்கள்யார்க்கும்வகுக்குந்திருவருள்வாழியவே. (௱)

எட்டாவது
மகிழா மகிழ்ச்சி முற்றிற்று.

[தொகுப்பு வெண்பா.]

கிளவிக்கொத் தெட்டுக் கிளவிகடொண் ணூற்று
றளவிற் கலித்துறைநா ன்றுயிற்—றளமுருவித்
தைக்குங் குருவருளைச் சற்சீடன் பெற்றபொருள்
வைக்குந் திருவருட்கோ வை.

குருஸ்துதி.

நிகராரு மில்லாத நிர்மலற்குக் கைம்மா
றெதுகாறு மெத்தைத்தான் செய்வே—னிதுகாறு
மில்லாத கோவை யிசைவித்தா னெம்பெருமான்
நல்லாறு நானே யவற்கு.

திருவருட்கோவை முற்றிற்று.

ஜகஜ்ஜநநீஸத்குரோபாஹி.

செய்யுள் முதற்குறிப் பகராதி.

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அடையாரை	௫	ஊர்களெல்லா	௨௰
அப்பாவென்றே	௨௪	எக்காலமுந்	௧௧
அருகாயிருப்பவ	௩௨	எத்தனையெத்தனை	௨௯
அல்லல்வினை	௧	எந்தெந்தவன்பர்க்கு	௨௮
அழுபவர்க்கோடி	௨௫	எந்தெந்தவன்பருமோ	௨௮
அறிந்தீர்வினை	௨௬	எந்நாளும்போலிலை	௧௯
அன்பாயிருப்பவ	௩௨	எந்நாளுமோர்நா	௨௮
அன்பேயொரு	௧௬	எம்மாறும்வேண்	௨௪
ஆணிப்பொன்	௧௧	எல்லாக்குண	௬
ஆராவமிழ்து	௧௧	எல்லாப்பதவி	௩௨
ஆவாவிவனை	௧௩	எல்லாமுமொன்றா	௧௩
ஆழமன்றே	௨௧	எல்லாவருள்செய்	௧௫
ஆனந்தமுங	௧௭	எவரேயறிவா	௩௨
ஆரூரடியருக்	௮	என்புடையான்	௧௩
இம்முறையே	௨	என்னன்பன்	௧௮
இருவருமோருள்ள	௨௧	என்னூற்குறியிட	௨௰
இவ்வன்பனிவ்	௨௬	என்னேயிவன்	௧௯
இவனென்றும்	௬	என்னேவியப்	௮
உண்டாகின்ற	௧௬	என்னைத்தனின்	௨௩
உருகுதற்கே	௫	என்னைமறந்திடு	௧௮

செய்யுள்.	பக்கம்.
என்னையுநீயகன்	௧௭
ஏயேயெனவென்னை	௮
ஒருகாலுருகிடு	௨௫
ஒன்றுமின்றென்	௩௧
ஒன்றேயெனும்	௧௦
ஓமெனுமோர்	௨௨
கண்ணார்மணியு	௧௨
கண்ணேகமழு	௧௩
கல்லேயிரும்பே	௧௪
கல்வியென்றேது	௧௫
கழலேயெனச்	௧௨
காடாண்டபேர்	௯
காணக்கண்கோடி	௧௭
காணார்கருதா	௧௨
காயாப்பிறவி	௫
காலத்தினாற்	௧௦
கிளவிக்கொத்	௩௩
குருநாதர்யாண்	௩௦
குருநாதரையிரு	௩௦
கூறப்படாத	௧௨
கூறுந்திருவருட்	௧
கொய்யாமலருங்	௧௯
சங்கற்பமில்லாம	௮
சட்டகமுந்நமக்	௭
சத்தியமேநித்	௧
சாலப்பெரியவர்	௨௪
சீரார்ந்தநாதனை	௫
சூழுடையாயத்தை	௬
செழுந்தாமரை	௭
சென்றாரலரவர்	௨௩
சொல்லாமற்சொன்ன	௩௧
தண்ணாரமிழ்த	௨௬
தன்பணியேயன்றி	௨௦
தன்பாலருள்பெற	௨௦
தாம்பெற்றபேறி	௨௯
தானார்க்குமோர்	௧௭
திருவருட்கேயொரு	௪
திருவருட்கோவை	௨
தேங்காமற்	௧௦
தேங்கியகாத	௧௪
நாங்கற்பனை	௭
நாதரின்னே	௨௮
நிகராருமில்	௩௩
நித்தியந்தின்	௧
நீதான்கவலலை	௧௮
நீயேயெனதுயிர்	௧௯
நீரேவினவுதிர்	௨௬
பண்டான்கமழு	௧௪
பல்லோமுளையா	௨௭
பள்ளங்கண்	௨௩
பற்றொன்றிலா	௩௧
பாங்காயிருப்பவ	௩௨
பிரிந்தாலருளே	௧௮
பெரியதொர்காலம்	௨௯
பெரியீர்வினவு	௨௬
பேசுகின்ற	௨
பேயேயனையிர்	௭
பொய்யறியார்	௨௪
பொன்னைக்கண்	௧௪
மருந்தும்பிறவி	௨௩
மருளுந்தெருளு	௬
மாயப்பெருங்	௧௦
முத்திக்குவாயி	௧௪
முன்னென்று	௨௧
மெய்யேயிவர்	௨௨
மெய்வாய்கண்	௩௦
யாரறிவாரென்	௩௧
விரிசித்தம்	௨௭
வேண்டாதவேண்	௨
வேதங்கடந்த	௨௧